ஆண்/பெண் என்று பராபட்சம் காட்டாமல் சமமாக நடத்தும் போது புறக்கணிப்பு குறைந்து அவர்களின் அனைத்து தேவைகளும் பூர்த்தி செய்யப்படும்.

- குழந்தைகள் தோல்வி அடையும் போது அவர்களை திட்டுதல் அல்லது தண்டனை கொடுப்பதை தவிர்த்து அவர்களை ஊக்குவித்தல் வேண்டும்.
- மற்ற குழந்தைகளுடன் ஒப்பிட்டு பேசாமல் அவர்களின் தனித்தன்மை/திறமைகளை கண்டறிந்து அவற்றை வளர்த்துக் கொள்ள பெற்றோர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்.
- குழந்தைகளுக்கு ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்பதற்கு ஆவண செய்ய வேண்டும்.
- பிற இடங்களில் குழந்தைகளுக்கு தீங்கிழைத்தல் தொடர்பாக ஏற்பட்டுவரும் விஷயங்கள் தங்கள் குழந்தைகளுக்கு நடக்கின்றதா என பெற்றோர்கள் அறிந்து வைத்திருத்தல் வேண்டும். குழந்தைகளுடன் அமர்ந்து அன்றாட நிகழ்வுகளை கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும். மேலும் அவர்கள் கூறும்போது பயப்படும் வகையில் முகபாவனைகள் மாற்றுதல் கூடாது.
- தங்களுடைய குழந்தைகளுக்கு தீங்கிழைத்தல் பற்றிய விவரங்கள் அறிந்து பின் உடனடியாக அதை சரிசெய்ய ஆற்றுப்படுத்துதல்/உளவியல் நிபுணர்கள் மூலம் ஆற்ப்படுத்துதல் வழங்க வேண்டும்.
- குழந்தைகளின் நலனில் பெற்றோர்கள் எடுக்கும் முடிவுகள் சரியானதா என அறிந்தும் குழந்தையின் விருப்பம் என்ன என்று அறிந்தும் செயல்பட வேண்டும்.

### கல்வி நிறுவனாங்கள்

1. ஆசிரியர்கள், குழந்தைகளுக்கு பாதுகாப்பான தொடுதல், (Safe and unsafe touch) பாதுகாப்பற்ற தொடுதல் பற்றிய தகவல்களை கற்றுக் கொடுக்கவேண்டும்.
2. வாழ்க்கைத் திறன் கல்வியினை குழந்தைகளுக்கு பயிற்றுவிக்க வேண்டும்.
3. பள்ளிகளில் குழந்தைகளுக்கு ஏற்படும் பிரச்சனைகளை பள்ளி மேலாண்மைகுழு அல்லது வகுப்பு/பள்ளி மாணவர் தலைவர் மேற்கூறிய நிகழ்வுகளை தலைமையாசிரியரிடம் கொண்டு சென்று தீர்வு காணும் வகையில் பயிற்சி கொடுக்க வேண்டும்.

இவ்வாறு பள்ளிகளில் தீங்கிழைக்கப்படும் போது குழந்தைகள் தன்னை தானே தாழ்வாக நினைப்பது, பள்ளியில் கவன குறைவாக இருப்பது போன்ற இன்னும் பல்வேறு பிரச்சனைகளிலிருந்து விடுபட மேற்கூறிய கல்வி மற்றும் பயிற்சி அளிப்பது மூலம் சாத்தியப்படும்.

### சேவை நிறுவனங்கள்

தங்களது கல்வி நிறுவனங்களில் தங்கியுள்ள/கல்வி பயிலும் குழந்தைகளுக்கு தீங்கு விளைவிப்பதை அறிந்தவுடன் தீங்கின் தன்மையை பொறுத்து சம்மந்தப்பட்ட அலுவலகத்துக்கு (உதாரணமாக பள்ளி தாளாளர் தலைமை ஆசிரியர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட சமூக நல அலுவலர், முதன்மை கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர், காவல்துறை அலுவலர், போன்றவர்களுக்கு) உடனடியாக தக்க ஆதாரங்களுடன் தெரிவித்து தீர்வுகளை காண முயற்சிக்க வேண்டும்.



குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்கள் அந்தந்த இல்லங்களில் உண்டு, உறைவிட வசதியுடன் உள்ள குழந்தைகளுக்கு மற்றவர்களால் ஏதேனும் தீங்கிழைக்கப்பட்டிருந்தால் அது பற்றிய தகவலினை ஆதாரத்துடன் இல்ல நிர்வாகி, கண்காணிப்பாளர், மேற்பார்வையாளர்களிடம் தகவல் தெரிவித்து குழந்தைகளை பாதுகாத்தல் வேண்டும்.

### பொதுமக்களின் ஒத்துழைப்பு

- குழந்தைகளுக்கு தீங்கிழைக்கப்படுவதை தவிர்க்க அல்லது அவர்களை பாதுகாக்க 1098 என்ற எண்ணிற்கு தகவல் அளிக்கலாம்.
- அனைத்து காவல் நிலையங்களிலும் குழந்தை பாதுகாப்பிற்காக குழந்தை நல அலுவலர் தனி காவல் துறை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருப்பதால் அவரிடம் புகார்/தகவல் அளிக்கலாம்.



- குழநிதைகளுக்கு தீங்கிழைக்கப்படுவதை தடுக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

"கேள்வி கேட்பது நமது சுதந்திரம்
குழந்தைகளின் உரிமைகளை காப்பது நமது கடமை"


**கருத்துருவாக்கம்**

**மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம்**
**சமூக பாதுகாப்பு துறை**

எண்.300, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, கெல்லீஸ்,
சென்னை – 10 தமிழ்நாடு தொலைபேசி எண். 044-2642 1358
மின்னஞ்சல் – scpstn4@gmail.com
இணையம் – www.socialdefence.tn.gov.in


# குழந்தைகளுக்கு தீங்கிழைத்தல்

# (CHILD ABUSE)



## மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம், தமிழ்நாடு

## உதீங்கிழைத்தல் (Abuse) என்றால் என்ன?

தீங்கிழைத்தல் என்பது குழந்தைகளுக்கு, எதிராக உடல் ரீதியாக, மன ரீதியாக, பாலியல் ரீதியாக, உணவு ரீதியாக நடத்தப்படும் வன்முறைகள், உரிமைகள் மீறல், புறக்கணிப்பு போன்ற நிகழ்வுகள் அடங்கியது ஆகும்.

### 1. உடல் ரீதியான தாக்குதல் அல்லது தீங்கிழைத்தல் (Physical Abuse)



தீக்காயம் ஏற்படுத்தல், அடித்தல், உதைத்தல், குத்துதல், தாக்குதல் போன்ற நிகழ்வுகள் மூலம் குழந்தைகளுக்கு தீங்கிழைத்தல் அனைத்தும் உடல் ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

### 2. பாலியல் ரீதியான தீங்கிழைத்தல் (Sexual Abuse)

பாலியல் ரீதியான தொந்தரவுகள், பாலியல் ரீதியான தகாத உறவுகளுக்கு குழந்தைகளை தவறாக பயன்படுத்துதல், பாலியல் ரீதியான தாக்குதல்கள் போன்றவைகள் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் ஆகும். இவற்றில் குழந்தைகளின் அந்தரங்க உறுப்பை தொடுதல், வல்லுறவு உடலுறவு கொள்ளுதல் போன்றவை பாலியல் ரீதியான தீங்கிழைத்தல் ஆகும்.



### 3. புறக்கணிப்பு (Neglect)

குழந்தைகளின் அடிப்படை தேவைகளை வழங்கமறுத்தல் அல்லது தவறுதல் புறக்கணிப்பு ஆகும். இவை.

உடல் ரீதியான புறக்கணிப்பு - உணவு, உடை மற்றும் சுகாதாரம்.

கல்வி ரீதியான புறக்கணிப்பு - கல்வித் தேவைகள்

மன ரீதியான புறக்கணிப்பு - அன்பு இல்லாமை, கவனிப்பு இல்லாமை.

### 4. உணர்வு ரீதியான தீங்கிழைப்பு (Emotional Abuse)

மன அதிர்ச்சி ஏற்படுத்தும் செயல்கள், தோல்விகள், திட்டுதல், தண்டனை கொடுத்தல், ஒப்பிட்டு பேசுதல், சிறுமைப்படுத்துதல் போன்ற நிகழ்வுகள் குழந்தைகளிடையே உணர்வு பூர்வமான பாதிப்பை ஏற்படுத்துவது ஆகும்.

### திங்கிழைத்தலுக்கு உள்ளான குழந்தைகளின் விவரங்கள்

- தற்போதைய சூழ்நிலையில் 69% குழந்தைகள் உடல் ரீதியான பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இதில் 48.7% குடும்ப உறுப்பினர்களினாலும், 34% இதர நபர்களினாலும் பாதிக்கப்படுகின்றனர்.
- பெண் குழந்தைகளில் 50.76% பேர் பாலியல் துன்புறுத்தல் தாக்குதல் போன்ற நிகழ்வுகளால் பாதிக்கப்படுகின்றனர்.
- 48.37% பேர் உணர்வு ரீதியான தீங்கிழைத்தலுக்கு ஆளாகின்றனர்.
- 83% பேர் பெற்றோர்களினால் உணர்வு ரீதியான குன்புறுத்தலுக்கு ஆளாகின்றனர்.
- 70% தீங்கிழைக்கப்பட்ட குழந்தைகள் அத்தகைய நிகழ்வுகளை யாரிடமும் தெரிவிப்பதோ அல்லது பகிர்ந்து கொள்வதோ இல்லை.
- 65% குழந்தைகள் பள்ளிகளில் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவதாகவும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

### குழந்தைகளுக்கு தீங்கிழைக்க அதிக வாய்ப்புள்ள இடங்கள்

குழந்தைகளுக்கு தீங்கிழைக்க சாத்தியமான இடங்கள் என்று குறிப்பிட்டு கூற இயலாது. ஏனெனில் பல இடங்களில் பல்வேறு விதமான நிகழ்வுகள் அன்றாடம் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. பொதுவாக கீழ்கண்ட இடங்களில் குழந்தைகள் அதிக நேரம் செலவிடுவதால் தீங்கிழைத்தல் அதிக வாய்ப்புள்ள இடங்களாகும்.

### குடும்பங்களில்

- பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடம் அவர்களின் திறமைக்கு மீறி எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்த அதனால் ஏற்படும் வெறுப்பினை குழந்தைகள் மீது செலுத்துகின்றனர்.
- வறுமையின் காரணமாக பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை வேலைக்கு அனுப்புதல். அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யாமல் இருத்தல்.
- குடும்பங்களில் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு கிடைக்கப்பெறாத குழந்தைகள் வீட்டை விட்டு ஓடுதல். தெரு ஓரங்களில் வாழ்தல்.
- பெற்றோர்களால் கைவிடப்பட்ட குழந்தைகள் மற்றும் அனாதை குழந்தைகள் தங்களின் அடிப்படை தேவைகளுக்காக வேலை செய்து, சுகாதாரமற்ற சூழ்நிலையில் வாழ்ந்து ஊட்டச்சத்து உணவு கிடைக்கப்பெறாமல் போகும்போது சமுதாயத்தால் பல வழிகளில் பாதிக்கப்படுகின்றனர்.
- பெற்றோர் தங்கள் குழந்தைகளின் முன்னிலையில் தவறான தீய வார்த்தைகளை உபயோகித்தல். சண்டை போட்டுக் கொள்ளுதல், அடித்தல் போன்ற நிகழ்வுகள் ஏற்படும் போது மன ரீதியான பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.
- போதிய இடவசதி இல்லாத குடும்பங்களில் பெற்றோர் குடும்ப பிரச்சனைகளை குழந்தைகள் முன் பேசும் போது அவர்களின் கல்வியில் பின்னடைவு ஏற்பட்டு பள்ளி இடைநிற்றல் சூழலுக்கு தள்ளப்படுகினறனர்.
- குடும்பத்தில் அன்பு கிடைக்கப்பெறாத குழந்தைகள் பிறரிடம் தேடும் போது தீய பழக்கங்களுக்கு ஆளாக்கப்படுவது மட்டுமல்லாமல் மற்றவர்கள் தவறான காரியங்களுக்கு ஈடுபடுத்த அதாவது பாலியல் தொந்தரவு செய்ய வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்கின்றனர்.

### கல்வி நிறுவனங்களில்

- பள்ளியில் படிக்கின்ற மாணவர்களிடம் ஆசிரியர்கள் அவர்களின் திறமைக்கு மீறி எதிர்பார்க்கும் போது பாகுபடுத்தப்படுகின்றனர்.
- மாற்றுத்திறன் படைத்த குழந்தைகள் புறக்கணிக்கப்படுதல்.
- ஆசிரியர்கள் குழந்தைகளை வகுப்பறையில் தண்டிப்பதும், மற்ற மாணவர்களுடன் ஒப்பிட்டு பேசுவதும் மற்றும் விரும்பத்தகாத வார்த்தைகளைப் பயன்படுத்துவதும், குழந்தைகளை உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் பாதிக்கின்றது.
- பள்ளியில் பெண் குழந்தைகளிடம் ஆண் ஆசிரியர்கள் கண்ஜாடை காட்டுவது, இரண்டு அர்த்தமுள்ள வார்த்தைகளை பேசுவது, தவறான உணர்வுடன் பார்ப்பது, தொட்டு பேசுவது, அடிப்பது போன்ற காரணத்தினால் அவர்கள் பள்ளி இடைநிற்க வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.

### தீங்கிழைத்தலினால் குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள்

1. குழந்தைகளுக்கு தீங்கிழைப்பதினால் தங்களை தாங்களே தனிமைபடுத்தி கொள்ளும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.
2. குழந்தைகளின் உடலில் பாதிப்பு ஏற்படுகிறது.
3. மன அழுத்தம் ஏற்படுதல்.
4. குறைவான சுய மதிப்பு மற்றும் தாழ்வு மனப்பான்மை.
5. மூர்க்கத்தனமான நடத்தை.
6. தனக்குத்தானே தீங்கிழைத்துக் கொள்ளுதல்.
7. ஆளுமைக் கோளாறுகள்/ஆளுமைத் தன்மை குறைவு.
8. தற்கொலை முயற்சிகள்.
9. பாலியல் தொழிலுக்கு தள்ளப்படுவதால் பாலியல் நோய்க்கு ஆளாகுதல்.
10. குழந்தைகளின் சிந்திக்கும் திறன்/தனித்தன்மை குறைந்து விடுகிறது.
11. குழந்தைகளின் சுதந்திரம் பறிபோகிறது.
12. மகிழ்ச்சியற்ற தன்மை.

குழந்தைகளுக்கு தீங்கிழைத்தலின் பாதிப்புகள் தீங்கிழைத்தல் நடந்தது முடிந்தவுடன் நின்றுவிடாது. அவர்களின் வாழ்நாள் முழுவதும் அவ்வப்போது/அன்றாட வாழ்வில் கூட தீங்கிழைத்தலின் பாதிப்பு இருந்து கொண்டே இருக்கும்.

### குழந்தைகளுக்கு தீங்கிழைத்தலை தடுக்க வழி முறைகள்



- பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் தோழமை உணர்வுடன் பழக வேண்டும்.
- பெற்றோர்கள் குழந்தைகளை